**OS.NO:48/2021**

**PW 3 :** திரு.சேகர்

நாள் : 25.02.2025

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**1 முதல் 6 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் பேரி கம்பெனியில் வேலை செய்து, பணி ஓய்வு பெற்றுள்ளேன். சாட்சியம் சொல்ல எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. வாதிகள் அழைத்ததன் பேரில் சாட்சியம் சொல்ல வந்தேன். நான் ராணிப்பேட்டை ஆஞ்சநேயர் கோவில் தெருவில் வசிக்கிறேன். 1ம் வாதி பக்கத்து தெருவில் வசித்துவருகிறார். வாதிகள் சொத்து சம்மந்தமாக வழக்கு போட்டுள்ளார்கள். 1ம் வாதி, அவரது கணவர் கரீம்பாயின் சொத்துக்களின் பங்கு கேட்டு வழக்கு போட்டுள்ளார். கரீம்பாய்க்கும், 1ம் வாதிக்கும் பிஞ்சிகிராமத்தில், தெற்கு தெருவில் முஸ்லீம் முறைப்படி திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு சாட்சியாக கரீம்பாய்யின் தந்தை, சந்திரன் ஆகியோர் இருந்தார்கள். நானும் அந்த திருமணத்திற்கு சென்றேன். இஸ்லாம் முறைப்படி திருமணம் நடந்ததால் நிக்கா நாமா எழுதினார்களா என்றால், எனக்கு தெரியாது. திருமணத்தில் இஸ்லாம் முறைப்படி மகஹராக எவ்வளவு தொகை நிர்ணயம் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த திருமணத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை. அந்த திருமணம் பகல் 12 மணியில் இருந்து 1 மணிக்குள் நடந்தது. திருமணம் நடந்த தேதி எனக்கு நினைவில்லை. 1980ம் ஆண்டு நடந்தது. 1980ம் ஆண்டு எனக்கு வயது 18 ஆகும். நான் 1960ம் ஆண்டு பிறந்தேன். நான் பேரி கம்பெனியில் 1982ல் வேலைக்கு சேர்ந்தேன். 1ம் வாதி பிஞ்சி, ஜெயராம் நகரை பூர்விகமாக கொண்டவர். 1ம்

வாதி சுமார் கடந்த 30, 35 வருடங்களாக ராணிப்பேட்டையில் வசிக்கவில்லை என்றால், அவருக்கு நிரந்தர இருப்பிடம் இராணிப்பேட்டையாகும். ஆனால், அவர் சென்னையில் வேலை செய்து கொண்டு வசிக்கிறார். கரீம்பாய் 40 ஆண்டுகளாக பிரியாணி கடை நடத்தி வந்தார் என்பதற்கு என்னிடம் ஆதாரம் இல்லை என்றால், சரிதான். கரீம்பாய் எந்த தொகைக்கு, எந்த வருடம் சொத்தை கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. 1ம் வாதி வாலாஜா நீதிமன்றத்தில் ஜீவானம்சம் கோரி தாக்கல் செய்த வழக்கில் நான் சாட்சி அல்ல என்றால், சரிதான். ஆனால், அந்த ஜீவனாம்சம் வழக்கு பற்றி எனக்கு தெரியும். கரீம்பாய் 2வதாக யாரை திருமணம் செய்துகொண்டார் என்று எனக்கு தெரியாது. கரீம்பாய்யின் வீடு செட்டித்தாங்கல் கிராமத்தில் உள்ளது. அந்த வீட்டிற்கு நான் சென்றுள்ளேன். அந்த வீடு மாடி வீடாகும். அந்த வீட்டின் மதிப்பு 5 வருடங்களுக்கு முன்பு 60 இலட்சம் ஆகும். கரீம்பாய் கடைக்கு நான் சாப்பிட போகும்போதெல்லாம் வாதிகளுக்கு பணம் உதவி செய்யுமாறு கேட்பேன். கரீம்பாய உயிரோடு இருக்கும் வரையில் வாதிகள் பண உதவிகேட்டு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், சரிதான். 1ம் வாதி மாதம் ரூ.1000 ல் இருந்து ரூ.2000 வரை சம்பாதிக்கிறார். 2ம் வாதி ஆட்டோ வைத்து ஆட்டோ ஓட்டுகிறார் என்றால், சரிதான். வாரிசு சான்றிதழ் பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால், சரிதான். வாதிகள் இருவரும் தற்போது வரை இந்து மத வழிபாட்டை தொடர்கிறார்கள் என்றால், 90 சதவீதம் இருவரும் முஸ்லீம் மத வழிபாட்டை தற்போது வரை பின்பற்றுகிறார்கள். ஆனால், வாதிகள் இருவரும் முழுமையான முஸ்லீமாக இல்லை என்றால், சரிதான். வாதிகள் முஸ்லீம் மதத்தையும் பின்பற்றுகிறார்கள், இந்து மதத்தையும்

பின்பற்றுகிறார்கள். அவர்கள் பெயர் வச்சலா, ராஜசேகர் என்றால், சரிதான். நான் வாதிகளுக்கு நெருக்கமானவர் என்பதால், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

Sd/. M.Selvam.,
I Additional District Judge,
Ranipet.